"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 505,79,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

இந்த எக்ஸர்சைஸ், பேரவையில் 24 வருடங்களுக்குப் பிறகு இப்போது நடக்கிறது. 1971-லேதான் இந்த எக்ஸர்சைஸ் இங்கே நடந்திருக்கிறது. அதற்கு முன்னர் 1967-லே நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயும் சாதனைதான்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன் வடிவு 1996 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.